# மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் முடக்கம்! ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!



மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வரக்கூடாது என பிடிவாதம் பிடித்து திட்டத்தை முடக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரை மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் சார்பில் மதுரை பழங்காநத்தத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் எழுச்சி உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., பூமிநாதன் எம்.எல்.ஏ,. கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், மா.ஒச்சுபாலு, நாகராஜன், கரு.தியாகராஜன், பெ.குழந்தைவேலு, தனச்செல்வம், வக்கீல் பாலாஜி, கே.ஜ.மகிழன், ஏர்போர்ட் பாண்டியன், ஜி.பி.ராஜா, லதா அதியமான், மா.ஜெயராம், அக்ரி கணேசன், துணை மேயர் நாகராஜன், எம்.இளங்கோ, விமல், சௌந்தரராஜன் மற்றும் தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், மதுரை வடக்கு, தெற்கு, மாநகர் மாவட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்

## ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சட்ட ஆய்வு மையம் சார்பில் —

## புதுடெல்லியில் - எஸ்.செல்வகுமாரி எழுதிய ‘சட்டத்தின் குரல்’ நூல் வெளியீட்டு விழா!

### மேனாள் நீதியரசர்கள் – மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பங்கேற்பு!

புதுடெல்லி, நவ. 23 -

சென்னை ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சட்ட ஆய்வு மையம் சார்பில் ‘சட்டத்தின் குரல்’ என்ற நூல் புதுடெல்லியில் வெளியிடப்பட்டது.

உச்சநீதிமன்ற வழக்கறிஞர் எஸ்.செல்வகுமாரி எழுதிய ‘சட்டத்தின் குரல்’ நூல் வெளியீட்டு விழா, புதுடெல்லி, ரபி மார்க் - கான்ஸ்டிட்யூசன் கிளப் ஆப் இந்தியா’வில் நேற்று முன்தினம் (21.11.2025-வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு மேனாள் தலைமை நீதியரசர் எம். கற்பக விநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

நூலை வெளியிட்டு, மேனாள் தலைமை நீதியரசர் (சென்னை உயர்நீதி மன்றம்) டி.ராஜா அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

மேனாள் நீதியரசர், உச்சநீதி மன்ற மூத்த வழக்கறிஞர் எஸ். நாகமுத்து, சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் எஸ்.எஸ். சுந்தர் மற்றும் மாநிலங்களவை கழக உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்க ளாக பங்கேற்றனர்.

கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பவுண்டேசன், சென்னை சார்பில் அதன் இயக்குநர் மோ. பாட்டழகன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி.எஸ். அகிலன் ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்



## முரசொலி மாறன்

### நவம்பர் 23 (2003)

**“திராவிட இயக்க முன்னோடி – கழகத்தின் தூண் – ஈடில்லா சிந்தனைச் செம்மல் – மாபெரும் ராஜதந்திரி – முரசொலியின் பிதாமகன் – கழகத்தின் மூளை – கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.**

**தமது 35 ஆண்டு காலத்திற்கும் மேலான நாடாளுமன்ற அனுபவத்தால், நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.**

**மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும்புகழ் பெற்றவர்.**

**எழுத்தாளராக, பத்திரிகையாளராக, திரைப்பட கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.**

**தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லாமல் கழகமே மூச்சென பணியாற்றிய பண்பாளர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**